உ

சந்தனத்தேவன் சிந்து.

இஃது

முதுகுளத்தூர்

ச. பூலாருசாமி பிள்ளையவர்கள் இயற்றியது



சந்தனத்தேவன் பின்னைத்தேவன்

சிருபோது

M. முத்துச்சாமி பிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை புதுமண்டபம் புஸ்த்தஷாப்

எஸ். முத்தையபிள்ளை யவர்களால்

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரசில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1907. விலை பைஸ் 6.

உ

முருகன் றுணை.

சந்தனத்தேவன் சிந்து.

காப்பு வெண்பா.

சந்தனத்தேவன்கதையைத் தாரணியிலேவிளங்கச்
சுந்தரமாய்ச்சிந்துகவி சொல்லுதற்கு-சந்தகஞ்சேர்
கானகத்தில்கன்னிமுன்னம் கந்தனுக்காய்வந்துதித்த
ஆனைமுக னெந்தகம்.

நொண்டிச்சிந்து.

தெந்தினத் தினதினனு-தினதின

சந்தனத்தேவ்ன்கதையைச் சொல்லுதற்கு தந்திமுகனிணையடி
சிந்தைசெய்குவாம்
திருவளர்போடிநகர் சேகரமாம் சிரந்திடுகோமராஜ
புரந்தனிலே
இந்திரன்குலத்துதித்தோன் பிரமலை யெங்கும்புகழ்ந்திடும்கீர்த்தி
தங்கிடும்நாட்டான்
மந்தரமலைப்புயத்தான் கருப்பத்தேவன் மைந்தனெனவந்துதித்த
சந்தனத்தேவன்
சரித்திரம்தெரிந்தமட்டில் சொல்லுகிறேன் சந்தோஷமாய்க்கேழடி
சிந்தைமகிந்தே
காட்டினில்சென்றிடுவான் திடமிகு கரடிபுலியானையை
யுறமுடனே.
பிடித்துப்பிடித்தெரிவான் காட்டிலுள்ள பேச்சிப்பிசாசுகளும்
பூச்சியதாய்ப்
பரந்திடுமிவனைக்கண்டால் நாட்டுளோர் படும்பாடுமெத்தவுண்டு
கொடும்பாவியால்
எத்தனையோபுயவீரர் சந்தனத்தை எதிர்த்தவர்தலைகளை
யுதிர்த்திடுவான்
மத்தவரவன்றுணைவர் சொல்லுவேன் வகையுடன்கேழடி
தகவுடனே

சந்தனத்தேவன் சிந்து.

சந்தனத்தேவனுக்கு மூத்த தமயனும்பின்னத்தேவன்
னவன்தம்பி

மாயாண்டித்தேவனுமாம்-மாமன்மகன் மதங்கொண்டயானையும்
வணங்கிடுமே

காட்டுப்பட்டியிலிருப்போன் பெரிய கருப்பத்தேவனுமொரு
முரட்டுச்சவான்

பாலாறுபட்டியுள்ளான் பூச்சித்தேவன் வசூரனெனவேசொல்லும்
முத்துக்கருப்பன்

மார்க்கயன்கோட்டையுள்ளான் முத்துக்கண்ணன் மாமன்மகன்பெரிய
கருப்பனுமாம்

ஆனைமலயம்பட்டி பூச்சியென்ற ஆனைநிகருசின்ன
வீரத்தேவன்

காக்கிவாடம்பட்டியுளான் சின்னக்கருப்பன் கருணையுடனேபெற்ற
மாயாண்டி

ஆங்கத்தேவன்காமாக்ஷி இன்னும்பல அருமைத்துணைவர்வெகு
பெருமைகளை

எடுத்துரைக்கப்போமோ இவர்களின் எற்றமுள்ளசெய்கையினை
ச்சாற்றுகிறேன்

காட்டுப்பட்டியில்வாழும் பெரிய கருப்பன்மகளைவெகு
விருப்பமதாய்

மணமதுமுடித்துக்கொண்டு மறுவீடு வந்திருந்தயிடத்தில்
தந்திரமாய்

மாடுபிடிபெருங்கலகம் நடந்ததில் மார்க்கமுள்ளகம்பளத்து
நாய்க்கமார்கள்

இருவரையொருவாளால் சந்தனத்தேவன் யெத்திவிளதலைகளை
கொத்தினனே

அதுகண்டுதுரைத்தனத்தார் பிடித்திட ஆக்ரமித்துவருமுன்னம்
சீக்கிரமதாய்

தப்பிவிட்டானவனுடனே சேர்ந்திட்ட சண்டாளப்பெருங்கூட்டத்
தடிவீரரை

தூரத்தியுங்காணவில்லை இத்தகய துஷ்டர்களைஎப்படியுங்
கஷ்டமடைய

இங்கிலீஸ் துரைத்தனத்தார் சந்தனத்தேவ னென்றுசொல்லும் துஷ்டர்களை
கொண்றுவிடவே

கொண்டார்பெருவிரதம் இவர்களின் கொக்கரிப்புமுதலான
அக்கிரமத்தை

ஒடுக்கிடவேணுமென்று போலீஸ் உத்தியோகஸ்தர்களில்
புத்திசாலியாய்

அரிங்தெதெத்தார்சனதில்; கொஞ்சமும்; ஆயுசற்றவுயிற்க்கெம
ருசனைப்போல்

தருமராஜய்யதீரன் இன்ஷ்பெக்டர் சற்குணமுடையதிட
விற்பனனும்

அக்கிரமதுஷ்ட்டர்களை அடக்கிடும் அதிவீரன்பராக்ரம
மதியூகியாம்

தொளாயிரத்தம்பத்தொன்று ஹெட்கா சுடலைமுத்தேந்திர
திடவீரன்

ராமசுவாமிஐயர் யெட்கா நம்பரெண்ணூத்திருபத்தி
யொன்பதுமே

நாலூத்திபதினென்று உசன்கான் நற்றடவரையெனு
மற்புயத்தான்

ஆயிரத்திநூத்தியெட்டு முத்துச்சாமி அதிவீரதிடகுண
மதியூகி

நவீனவானழகுடையானளகரு சாமிமுதலின்னும்பல
சாமிகளும்

துப்பாக்கிகத்திகளும் பாய்ந்திடுந் தோட்டாவுடனேவெகு
யீட்டிகளும்

அதிதயிரியத்துடனே துஷ்டர்களை ஆக்கிரமித்துத்தேடினார்கள்
சாக்கிரதையாய்

இவர்களைப்பிடித்தவர்க்கு நூருரூபாய் லெகுவாய்க்கொடுப்பமென்று
வெகுமதியாய்த்

துரைத்தனத்தாரும்பால் இப்படிப்பட்ட துஷ்டர்களைப்பிடிப்பது
கஷ்ட்டமென்றே

ஐநூறுதருகிறதாய் உலகெங்கும் அரியும்படியாகவே
தெரியச்செய்தார்

இந்தப்பிரஸ்தாபமதை உலகிலுள்ள எற்றமிகுவீரர்கள்
சீற்றங்கொண்டு

துஷ்டர்களைநாம்பிடித்து வெகுமதி ஷோக்குடன்வாங்கவென்று
ஆக்கிரமித்து

புறப்பட்டார்புயவீரர் போலீஸ் உத்தியோகஸ்தருடன்
மித்திரர்களாய்

இந்தச்செய்திதனையறிந்து துஸ்டர்களும் எங்கேயோஒளித்தனர்
தங்காமலே

அடவியிலிவரிருந்த யிடங்களை அறிந்தமட்டுஞ்சொல்லுவேன்
தெரிந்துகொள்வாய்

பாளைவாய்கமுகில்வந்தூர் யென்ற|காவடிச்சிந்தின் வர்ணமெட்டு.

வேறு.

போடிநாய்க்கனூர்மலையில் கூடுசாமியாரளையாம்
புகள்பெரும்புதரதினில்வாசமே-அதிற்
போக்குவரத்தாயிருப்பார்நேசமே

அருமையாய்ப்போடிமலையி லெருமைப்பள்ளமென்னுமொரு
அந்தரமதானநடுக் காடதாம்-துஷ்டர்
சுந்தரமதாயிருக்க|வீடதாம்

அகமலைதேவாரமலை அதுகளி|லமர்ந்திருப்பர்
ஆதரவாகும்பிள்ளையாருத்திலு-மவ
ராளுகையாம்ரெட்டக் காட்டேத்திலும்

பாளையங்களுமிரங்குங்கூளைய|னூருக்கணவாய்
பாதகர்வரும்பிரம்பு|கட்டியாம்-இன்னும்
பள்ளங்களனேகமுண்டு கெட்டியாம்

சங்கராபுரங்கணவா|யங்கவர்கள்வந்திருந்து
சஞ்சரித்திடுவார்வெகு|கூட்டமே-வெகு
சந்தோஷமவர்களுக்கெதே ஷட்டமே

கோட்டயூர்கணவாயிலுங் கூட்டங்கூட்டமாயிருப்பார்
கொஞ்சமோகண்டம நாய்க்கனூர்மலை-அங்கே
கொண்டுவருவார்களாடு|நூர்தலை

கடைமலைக்குண்டென்ற|பெருங்காட்டருகுவெளியிலும்
கள்ளுக்குடம்ரெண்டு நூறுவந்திடும்-ஆட்டுக்
கறியீரல்கூட்டானும் போட்டுவெந்திடும்

மயிலாடுபாறையிலும் ஓயிலாய்பாலாறுடங்கல்
பதிங்கியிருக்கநல்ல பள்ளமே-அதில்
பாளையம்போல் வந்திருப்பார் வெள்ளமே

சதுரகிரிமலையும் எதிரானபாலைக்கோம்பை
சரியானயேத்தக்கோவில் கணவாயும்-நம்மள்
சாமியாம்வேலப்பர் கோவில்கணவாயும்

ஓண்டிக்காட்டுக்காட்டிலு மண்டியிருப்பார்களவர்க்
குற்றமில்லியம்புள்ளியாங் காட்டிலும்-நன்று
யோங்கியதேனிப்பாரஸ்டு காட்டிலும்

இப்பெரியகாட்டுகளில் எப்படியுஞ்சஞ்சரித்
திருந்துகொண்டு'செய்வர்பஞ்ச பாதகம்-அவர்க்
கெல்லாங்கிடைத்திடும் கொள்ளைச்சாதகம்

தெம்மாங்கு.

பேசுங்கிளிமொழியே அன்னப்பெடைபோல் நடையினளே
வாசமலர்க்கூந்தலாளே மாங்குயிலே கேளடிநீ

அலங்காரம்.

கன்னலனைய அன்னமேகேளாய்
இன்னமநூரில் உன்னிதமான
சொன்னய மிகுத்த தன்னியரிடத்தில்
[illegible]கர் கோம்பை தன்னில் வாழ்ந்திடும்

அடியே

நாட்டா ரொருத்தர் கேட்டார் கடனாய்
வீட்டாரறிய ஏட்டால்யெழுதி
ரூபாய் அஞ்சு நூறு கொடுத்தார்
[illegible]பாமென்று நீங்கவிடுத்தார்

அடியே

பணத்தை மூட்டையாய் குணத்துடன் கட்டி
[illegible]னத்தில் ஊருக் கிணக்கமுடனே
அம்பட்டனொருத்த னந்துணையாக
தம்முடன் கூட்டி தான்வரும் வழியில் (நன்)

தெம்மாங்கு.

கண்டானே சந்தனமும் கனத்தபண மூட்டையென்று
சண்டாளன் பின்தொடர்ந்து தான்மறித்துக் கொண்டானடி

அலங்காரம்.

காட்டில் மரித்துக் கனத்த தடியால்
மாட்டிக்கொடுத்த வலுத்த அடியால்
நாட்டார் பணத்து மூட்டையைப்போட்டு
வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தான்

அடியே

வம்புகள் செய்திடும் சந்தனத்தேவனும்
அம்பட்டனோடு நாட்டாரைத் துரத்தி
கம்பிட்டுங்கையாலுங் கணக்க அடித்தான்
கும்பிட்டுக் கெஞ்சியுங் கூக்குரல் போட்டார்கள்

அடியே

அய்யோ அய்யோவென் றலறினார்கள்
மெய்யாய்ப் பணத்தை வேண்டா மென்றார்கள்
கய்யால் கும்பிட்டுக் காலில் விளுந்தொன்றுஞ்
செய்யாம லெங்களைத் துரத்திவிடென்றார் (நன்)

தெம்மாங்கு.

ஊரத்திக்கதறினார்கள் உதவியொன்று மில்லையப்போ
காத்திலிருந்தபாவி கையருவாளால் துணித்தான்

அலங்காரம்.

சண்டாளனெனுஞ் சந்தனத்தேவன்
துண்டா யிருவர் தலையைத்துணித்து
கண்டாரரியாக் காட்டாரதனில்
கொண்டேயோடிட கொடுங்கயற்றினால்

அடியே

கட்டியேவிட்டு கனத்த பணத்தை
திட்டமாயெடுத்துச் செடிக்குள்ளொளித்த
குட்டுகள் தெரிந்து குறிப்பையறிந்து
சட்டஞ்செலுத்துஞ் சர்க்காரறிய

அடியே

கூடித்துரத்துங் கோலங்கொண்டு
தேடியேபோலீஸ் திடத்தவீரரும்
நாடியேதுரத்தி நாசகாலனை
சாடிப்பிடித்து சாட்சிகளுடன் (நன்)

தெம்மாங்கு.

கொண்டுவந்து ஜட்சிதுரைக் கோட்டில்விட்டு நீதியாக
கண்டுசொல்லும் சாட்சியில்லாக் காரணத்தால் விட்டுவிட்டார்

அலங்காரம்.

இன்னமுமிந்த ஈடழிவானுட
துன்னடத்தையை சொல்லமுடியுமோ

என்னால்தெரிந்தவழவு மிசைப்பேன்
கன்னல்மொழியே கருத்தாய்க்கேழே

அடியே

சங்கராபுரங் கணவாய்த்தாவில்
தங்கியிருபான் தனித்துவந்தோரை
பங்கப்படுத்திப் பதரவடிப்பான்
அங்கம்குலைப்பான் ஆண்மைகுலைவான்

அடியே

கூழையனூறுக் கூட்டக்கணவாயில்
ஏழைபோலிருக்கும் வேளைதன்னிலே
வீட்டுக்கென்று விறகுக்காக
காட்டுக்குவந்த கன்னியர்சிலரை (நன்)

தெம்மாங்கு.

ஆதரவாய்ப் பெண்களை அன்பாய் வரவழைத்து
காதுங்கையைப்பறித்துக் கடும்பாவியென்ன செய்வான்

அலங்காரம்.

ரெண்டுபெண்பிள்ளையை நெருக்கிநிருத்திக்
கொண்டவர்காதில் குணுக்கைப்போல
கண்டவர்மனங் கலங்கப்பூட்டை
கொண்டிபோலலொன் றுகக்கோர்த்து

அடியே

பூட்டிக்குண்டியில் தடியினாலே
மாட்டியவர்கள் மானங்கெடவே
காட்டிலிருந்து கதறிக்கொண்டு
வீட்டுக்குவர விடுவான்பாவி

அடியே

இப்பேர்பெற்றிடுஞ் சந்தனத்தேவன்
எப்படியோவவ நிஷ்டம்போன
அப்படியாக அளிம்புகள்மெத்த
ஒப்பியேசெய்ததை யுரைத்தேன்கேளே (நன்)

தெம்மாங்கு.

மதியூகன் மருதமுத்து மற்றவரைச் சேர்ந்தவரும்
சதிகாரன் சந்தனத்தின் தாயாரை யென்ன செய்தார்

அலங்காரம்.

சின்னமனூரில் வாளுந்தீரன்
மன்னவன்மருத முத்தெனும்வீரன்
இன்னமுமிவனுக் கேயுபகாரன்
என்னென்னகாரியம் செய்தார்யாரே

அடியே

சகலருமறிய சந்தனந்தாயை
பகலில் மொட்டையாய்ப் பங்கப்படுத்தி
முகமுந்தலையு மேல்முழுமையும்
சகலயிடத்துந் தனித்தனியாக

அடியே

வெள்ளையுங்கருப்பும் விதவிதமாக
புள்ளிபுள்ளியாகப் பொட்டுகளிட்டு
கள்ளியைமெத்தக் கதரவடித்து
கொள்ளிவாய்ப்பேய்போல் கூக்குரலிடவே (நன்)

தெம்மாங்கு.

சேலைத்துணி யில்லாமல் தெருவூடே யோடவிட்டு
ஆலிலையும் வேப்பிலையும் அரைதனிலே கட்டிவிட்டார்

அலங்காரம்.

இந்தக்கோல முடைய இவளும்
சந்தனத்தேவன் சமீபமோடி
அந்தப்பாவிகள் செய்த அவதிகள்
இந்தவிதமென் றேங்கியழுதாள்

அடே

பாவிசந்தனம் பயலேஉன்னை
தாவிப்பெற்ற தன்மையிதுவோ
ஆவிபதற அடித்தயிந்தக்
கேவலக்கோலங் கேட்கலாகுமோ

அடே

யென்று துடித்தாள்
யென்னமோ நடித்தாள்
வயத்தி லடித்தாள்
வகையாய்ப் படித்தாள் (நன்)

தெம்மாங்கு.

இந்தவிதங் கேட்டவுடன் யிடியேறெனக் கலங்கி
சந்தனமே நானுனல் தாரே னவன்தலையை

அலங்காரம்.

என்றுசந்தனஞ் சபதங்கூறி
நன்றுமருத முத்துதலையை
இன்றேதாரே னென்னத்தாயை
ஒன்றும்பதாரா திருக்க வுரைத்தான்

அட்டா

அன்னையையிந்தக் கோலமாக்கிய
மன்னவன்மருத முத்துதலையை
யென்னமாய் வெட்டுவமெனவேமதித்து
பின்னையும்யோசனை யென்னென்னசெய்தான்

அடியே

யோசனை யறிந்தான்
நேச்சரைத் தெரிந்தான்
தூசனை மறந்தான்
வாசமாய்த் திரிந்தான். (நன்)

கும்மி.

இப்படியாகிய துஷ்டரைத்தேடியே யெங்யெங்குங்காணுமலேதிகைத்து
எப்படியாகிலுமிந்தச்சண்டாளரை இந்தச்சமையத்திலேபிடித்து (1)

கெட்டிக்காரரென்றுபேறுபெற்றிடவும் கிரேட்டுகள்வாங்கிடுவோமெனவும்
துஷ்ட்டக்தனத்தாரைநாம்பிடித்தோமானுல் துரைத்தனத்தார்வெகுமதிகள்.

அட்டியில்லாமல்கொடுப்பாரெனப்போலீஸ் அதிகாரஸ்த்தர்மனந்துணிந்து
மட்டில்லாமலேபுறப்பட்டசெய்தியை வளுத்தக்கேளடிதோகையரே (3)

வீரன்சுடலைமுத்தேந்திரனுமெந்த விதமுஞ்சந்தனத்தேவன்றனை
ஆரவாரத்துடனேபிடிப்போமென ஆயிரத்திநூத்தியெட்டுநம்பர். (4)

முத்துச்சாமிபிள்ளையுந்திடவீரனு முரட்டுத்தனமுள்ளாயினுஞ்சிலர்
சுத்தவீரத்தனமாய்ப்புறப்பட்டதைச் சுருக்கிச்சொல்வேன்விரிக்காமல். (5)

துப்பாக்கித்தோட்டாவும்கத்திகளுங்கொண்டு துரைத்தனத்தாரனுமதியால்
தப்பாமலேபெஷல்டூட்டிபெற்றுக்கொண்டு சற்றும்பயமின்றியே தொடர்ந்தார்.

இந்தவிபரமறிந்துகொண்டேதுஷ்டர் எப்படியும்நம்மைத்தப்பாமல்
விந்துபிடித்திடுவாரென்றுதீரம் மனதில்குடிகொண்டதானதினுல். (7)

ஆறிலுஞ்சாவது நூறிலுஞ்சாவது அன்றுபிரந்தமுதலாக
பாரிற்பிறந்தபெருமைநமக்கிந்தப் படிவிதித்ததெனத்துணிந்து. (8)

மனதினில்வயிராக்கியத்தைக்கொண்டு மன்னவன்சந்தனமென்னசெய்தான்
தனதுசொந்தப்புஜபலவீரனை தக்கதுணைவரெனச்சேர்த்து. (9)

வீச்சருவாளுடன்வாங்கருவாள்நன்றாய் வெட்டருவாள்கோளிவாலருவாள்
பாச்சலுடன்வெட்டும்பாளையருவாளும் பருவளரித்தடியும்வில்லும். (10)

கவணுங்கல்லுமடியினிலேகட்டி கண்டவர்காதவழிவிலக
அவனுடனேயொருநூறுவீரரு மச்சம்பயஞ்சற்றுமில்லாமல். (11)

நாட்டினிலேபிரவேசித்தெமனு நடுங்கிடச்சற்றுமிளையாமல்
கூட்டக்கொள்ளைகளும்தாஸ்டீகமாகவே கோலாகலமாயடித்திடுவான், (12)

மாடுபிடியிலுங்கன்னக்களவிலும் வளிப்பறியிலுந்தேர்ச்சியுள்ளான்
காடுவெளிகளிலேமறித்துக்கொண்டு கடுங்கொலைகளுஞ்செய்திடுவான். (13)

எத்தனையோகொலைசெய்துறிவனை யெதிர்த்துப்பிடிப்பாரொருத்தரில்லை
இத்தனைசூரத்தனமுடன்கூட்டமாய் யெதிரில்லாமல்த்திரியயிலே. (14)

மத்தகெசமாஞ்சுடலைமுத்துப்பிள்ளை மாபெலவான்மூத்துசாமிபிள்ளை
சுத்தவீரத்துடன்யெப்படியாவது சூதுகள்செய்துபிடிப்பமென்று (15)

ஆயுதபாணியாய்க்கூடித்துரத்தவும் ஆரும்பிடிப்டார்தேடிவிட்டார்
ஞாயவிதமாகமற்றொருநாளினில் நாலைந்துபேரகப்பட்டனராம். (16)

பிடிபட்டவெந்தகுற்றவாளிகளை பிசகில்லாமல்ருசுப்படுத்தி
தடித்தனத்தாரைத்துரைத்தனத்தவர் சட்டப்படிக்கேசியாயமதாய். (17)

வருஷக்கணக்கும்தீவாந்தரமும் மரணதண்டனையும்விதித்தார்
புருஷத்தனமாய்ப்பிடித்தவீரர்க்குப் புகளுடையதுரைத்தனத்தார் (18)

கெட்டிக்காரத்தனத்துக்குத்தக்கபடி கிரேட்டுகளும்பிரமோசன்களும்
மட்டில்லாமலேமெடல்களுங்கொடுத்து மருபடியுமினுங்கொடுத்தார் (19)

இப்படியாய்ப்பிடிபட்டவர்கள்போக யெங்குமகப்படாச்சந்தனத்தை
தப்பிலாப்போலீசுஉத்தியோகஸ்தருடன் தானேபிடித்துத்தருவனென்று. 20

சின்னமனூருக்கருக்கட்டாங்குளம் தீரன்மருதமுத்தேந்திரனும்
சொன்னவுடன்போலீசுத்தியோகஸ்தரும் சுருசுருப்புடன்வேலைசெய்தார். 21

இந்தவிபரந்தெரிந்திட்டசந்தனம் யென்னசெய்தானுமுபாயமதாய்
உந்தன்மூலமாகஆசாரவேனென்று உருதிசொல்லிமருதமுத்தை (22)

சொந்தமதானகரட்டுப்பட்டிக்கோவில் சோளக்காட்டுக்குள்வரவழைத்து
சந்தனத்தேவனுடநெட்டுப்பேர்களும் தலையைக்கொண்டுபோய்விட்டனராம்.

என்றவிபரந்தெரிந்தபோலீசார்கள் யெப்படியுமிந்தத்தப்பிலியை
இன்றுபிடித்திடவேணுமென்று துணிந்தென்னவுபாயங்கள்செய்தாலும். (24)

அகப்படாமலொழித்திருந்தானே அநேகநாளாக அடவிகளில்
பகல்பொழுதுமடங்கியிருப்பவன் பாதியிரவில்புறப்படுவான். (25)

ராத்திரிகாலத்தில்காட்டில்பெரும்புலி நன்றாய்த்திரியுந்தர்மதுபோல்
மேத்தரமாகத்துணைவரோடாயுதம் வேண்டுஞ்சவுகரியத்துடனே. (26)

காட்டினில்வேட்டைகள்ராடுவது லக்ஷக்கணக்கதாகுமதுதவிர்த்து
நாட்டினில்ராத்திரிவேட்டைகளாடுவான் நாசமுருஞ்சந்தனத்தேவன். (27)

எத்தனைகாலமிவனுக்குச்சென்றிடு மீஸ்வரனுக்குச்சகியாமல்
புத்திசாலியாமதியூகிநல்ல பூதிப்புரத்துமுனிசீபு. (28)

சந்தனத்தேவனுக்கேமனைப்போலவே சர்க்காருடனேசேர்ந்துகொண்டு
எந்தவிதத்துமிவனைப்பிடித்து இனும்வாங்கவேணுமெனநினைத்து. (29)

பூதிப்புரத்துமுனிசீபுவெகு புத்திமிகுத்தகுணசாலி
சூதுகளென்னஉபாயங்கள்செய்தாரோ துஷ்டனுஞ்சந்தனத்தேவனுக்கு (30)

காலமுடிந்தபடியாலுங்கணக் கற்றகுலையிவனைவிடுமோ
ஞாலந்தனிலிந்தச்சந்தனத்தேவனை நல்லமதயானையைக்குழியில். (31)

தாள்த்திப்பிடித்தகதையதுபோலிந்தச் சந்தனத்தேவன்தனைப்பிடித்தார்
வாள்த்திறன்ம்மளெட்வாட்சக்கிரவர்த்தி மகிமையினல்பிடிபட்டானே. (32)

பிடித்துகையில்விலங்குகளுங்காலில் பெருவிலங்குகளுமணிந்து
துடிதுடித்திடச்சித்திரவதைகள் சுமெளுவினல்செய்யாமல். (33)

சங்கிலியாலுடல்கைகால்களைக்கட்டி சந்தனத்தேவனைக்கொண்டுவந்து
இங்கிலீஷ்காரத்துரைத்தனத்தார் ஞாயமென்னசெய்தாரடிமின்னரசே. (34)

நீதியிலெள்ளளவுங்குறையாமனு நீதிப்படியாகஜட்சிதுரை
ஆதிமுதலாகவாதியெதிரிக ளரிந்தசாக்ஷிமுதலாக. (35)

பேதமிலாமல்விசாரணைசெய்து பெருங்குற்றவாளியிவனெனவே
சாதிவெள்ளைக்காரஜட்சிதுரையிதில் சந்தேகமில்லையெனத்தெரிந்து. (36)

சூரியசேசர்முதலியபேர்களால்ச் சொல்லுமபிப்பிராயங்கலந்து
பாரியவைக்கீல்களாரிக்கிமெண்டையும் பண்புடன்கேட்டொருசுவாகி. (37)

பூராவானகொலைகுற்றவாளியெனப் புகன்ருர்மரணதெண்டனையை
ஆராத்துயரமடைந்தானே யதர்க்கப்பால் மரணவயிராக்கியம். (38)

கொண்டான் துரைத்தனக்காரர்கொலைக்களம் கொண்டுவந்தார்களுயிர்போக்க
அண்டர்கள்போற்றிடுந்தென்மதுராபுரி அமர்ந்துவாழுங்குடிபடைகள். (39)

கும்புகும்பாய்க்கூடிசந்தனத்தேவன் கொடும்பாவியைத்தூக்கும்வேடிக்கையை
சம்பிரமமாகவேப்பார்த்திடுவோமென்று சகலரும்வந்துகூடினரே. (40)

வாந்தானேசந்தனத்தேவன்கொலைக்களம் வட்டப்பொட்டுமலங்காரத்துடன்
சுந்தரமானஜனங்களேயென்னைப்போல் துஷ்டத்தனத்தால்கெடாதிருங்கள்

என்றுமரணப்புலம்பல்சிலசில யென்னன்னமாகவோபேசினனும்
நன்றுநான்போரேனிமலோகமென்றுன் நடுக்களுத்தில்சுரிக்கினரே. (42)

போனதுடலைவிட்டேயுயிர்போகவும் பூமியிலேபிணங்கட்டைதனை
ஆனஇவன்றனுறவின்முறைபெண்டீர் ரந்தப்பிணத்தைக்கொண்டேகினரும்.

சந்தனத்தேவனெனும்பிணக்கட்டையை சமாதிவைத்தார்போத்தம்பட்டியில்
இத்தவிபரந்தெரிந்தபூலோகத்தி லெல்லாமாந்தர்களும்வாழி. (44)

சந்தனத்தேவன்சிந்து முற்றுப்பெற்றது.

அறிவிப்பு.

இத்தை தமுத்தைய பிள்ளையயன்றியே
எத்திரத்தவர் யாவருமிஷ்டமாய்
உத்திரவன்றி யச்சிடவுன்னுவார்
கத்திச்சுத்துங் கழுதையதாகுமே.